**செ.வெ.எண்: 727** **நாள்: 18.11.2024**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,** பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (PMMSY) 2021-22 நடுத்தர அளவிலான நன்னீர் வண்ணமீன் வளர்ப்பு பண்ணை அமைத்திட பொதுப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீடு 8.00 இலட்சம் என்ற அளவில் 40 சதவீத மானியத்தில் (மானியத் தொகை ரூ.3.2 இலட்சம்) பண்ணை அமைத்திட விருப்பம் உள்ள விவசாயிகள் மற்றும் உவர்நீர் இறால் வளர்ப்பு பண்ணை அமைத்திட பொதுப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீடு ரூ.14.00 இலட்சம் என்ற அளவில் 40 சதவீத மானியத்தில் (பண்ணை அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியம் சேர்த்து மானியத்தொகை ரூ.5.6 இலட்சம்) வழங்கும் திட்டத்தின்கீழ் ஆர்வமுள்ள விவசாயிகள் கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வரும் புதுக்கோட்டை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் சந்தித்து கூடுதல் விவரம் பெற்று விண்ணப்பம் சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அலுவலக முகவரி,** உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, பிளாட் எண்.1, டவுன்நகரளவு எண்: 233/1 அண்னை நகர், நிஜாம் காலனி, விஸ்தரிப்பு, புதுக்கோட்டை - 622 001. **அலுவலக தொலைபேசி எண்:** 043-22266994 ஆகும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai